## லண்டனில் அரங்கேற்றப்பட்ட

# இசைஞானியின் சிம்பொனி இசை தமிழ்நாட்டுக்கும், தமிழனுக்கும் பெருமை!

## இளையராஜாவுக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வரவேற்புரை!

**சென்னை, செப்.16 -**

**சென்னை, நேரு உள் விளையாட்டு அரங்கில், இசைஞானி இளையராஜா, திரையுலகில் 50 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளதை கொண்டாடுகிற விதமாக, தமிழ்நாடு அரசு சார்பில்,13.09.2025 அன்று மாலை நடைபெற்ற பாராட்டு விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு வரவேற்புரையாற்றினார்.**

**அப்போது அவர், ``லண்டனில் அரங்கேற்றப்பட்ட இசை ஞானியின் சிம்பொனி இசை, ஒட்டுமொத்த தமிழ் நாட்டுக்கும், தமிழனுக்கும் பெருமை" என்று குறிப்பிட்டார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வரவேற்புரை வருமாறு:

இசைத் துறையில், 50 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் இசைஞானி இளையராஜா அவர்களுக்கு, தமிழ்நாடு அரசின் சார்பாக நடத்தப்படுகின்ற பிரமாண்ட பாராட்டு விழாவில், வரவேற்புரை ஆற்றுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடை கிறேன். இந்த வாய்ப்பை, எனக்கு அளித்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு முதலில் எனது வணக்கத் தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டிற்கு எத்தனையோ அடையாளங்கள் இருக்கின்றன. அதில் மிக மிக முக்கியமான அடையாள மாக, யாரும் அழிக்க முடியாத அடையாளமாக திகழும் இசைஞானி இளையராஜா அவர்கள், அவரின் இசையும் இன்றைக்கு நம்முடன் இருக்கின்றன.

**இசைஞானி பட்டம்!**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மீதும், நம் முதலமைச்சர் அவர்கள் மீதும் தணியாத பாசம் கொண்டவர் நம் இசைஞானி அவர்கள். ராஜா சார் அவர்களின் இசைக்கு தானும் ஒரு ரசிகர் என்ற வகையில், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் 1988ஆம் ஆண்டில் இசைஞானி என்ற பட்டத்தை, நம் இசைஞானி அவர்களுக்குக் கொடுத் தார். அதுபற்றி, கலைஞர் அவர்கள் ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு எழுதியிருந்தார். அவர் எழுதியதாவது, 1988ஆம் ஆண்டு நடைபெற்ற ஒரு விழாவில், `இசைஞானி' என்ற பட்டத்தை யாரும் சொல்லாமல், முன்கூட்டியே திட்ட மிடா மல், என் இதயத்தில் மண்டி கிடந்த அன்பின் காரணமாக இளையராஜா அவர்களுக்கு சூட்டி மகிழ்கிறேன்' என்று கலைஞர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்.

அப்படிப்பட்ட இசைஞானி இளையராஜா அவர்களுக்கு, இன்றைக்குப் பாராட்டு விழா, எடுத்து நாம் கொண்டா டிக்கொண்டு இருக்கிறோம்.

**எங்கும் நிறைந்திருக்கும் இசை!**

நாம் எல்லோரும் வெவ்வேறு தாயின் வயிற்றில் பிறந்திருந்தாலும், நம் எல்லோரையும் தாலாட்டிக் கொண்டு இருக்கின்ற இசைத்தாய்தான் நம் இளையராஜா அவர்கள். அவரின் பாடல் இல்லாமல் எந்தக் குழந்தைக்கும் தாலாட்டு இல்லை, இளமையில் துள்ளல் இல்லை, அவர் பாடல் இல்லாமல், நம் அத்தனை பேருக்கும் காதல் இல்லை.



வயல்வெளி, டீக்கடை, திருவிழா, திருமணம், ஆட்டோ, பேருந்து இப்படி அனைத்து இடங்களிலும் நிறைந்து இருக்கக்கூடிய ஒரே இசைஞானி நம் இளைய ராஜா அவர்கள். இசையமைப்பாளர் என்பதையும் தாண்டி, இசை மருத்துவர் என்று சொல்லும் அளவிற்கு, இசைஞானி இளையராஜா அவர்கள்தான் மன அழுத்த நிவாரணி.

**வாழ்க்கைப் பயண வழித்துணை!**

சமீபத்தில், சமூக வலைதளத்தில் ஒன்றை படித்தேன். அதை இந்த நேரத்தில் உங்களிடம் பகிர விரும்புகிறேன். பொதுவாக, நாம் அனைவரும் தூரத்தை மீட்டர், கிலோ மீட்டர், மைல்ஸ் என்று அழைப்போம். ஆனால், இசை ஞானியின் ரசிகர்கள் மட்டும்தான் சென்னை டூ விழுப்புரம் எவ்வளவு தூரம் என்றால், 25 இளையராஜா அய்யா அவர்களின் பாடல்கள் என்று சொல்வார்கள். அந்த அளவுக்கு எல்லோரின் வாழ்க்கைப் பயணத்திலும் வழித்துணையாக இருப்பவர் அய்யா இசைஞானி அவர்கள்.

கோடிக்கணக்கான தமிழர்களைப் போல நானும் இசைஞானியின் இசையோடு சேர்ந்துதான் வளர்ந்தேன். பயணங்கள், தனிமை, குடும்ப நேரம், உடற்பயிற்சி நேரங்களில் என் ப்ளே லிஸ்டில் எப்போதுமே இளைய ராஜாவின் பாடல்கள் ஒலித்துக்கொண்டே இருக்கும். இசை, இசைஞானி இளையராஜா என்ற டைட்டில் கார்டின் மூலமே பல வெற்றிப் படங்களை தமிழ்நாட்டிற்கு தந்த பெருமை நம் இசைஞானிக்கு மட்டுமே உண்டு.

அய்யா இளையராஜா அவர்கள், முதன்முதலில் இசையமைத்த படம் அன்னக்கிளி. வருடம் 1976. அப்போது நான் பிறக்கக்கூட இல்லை. அன்று தொடங்கிய அவரின் இசைப் பயணம், இன்றைக்கு பலப் பரிமாணங்களில் வெளிப்பட்டுக்கொண்டு இருக்கிறது. அதிலும் குறிப்பாக, மிகக்கடினமான இசை வடிவம் என்றுச் சொல்லக்கூடிய சிம்பொனி இசையை லண்டனில் அரங்கேற்றி, தன் 82வது வயதிலும் இசைஞானி அவர்கள் புதுப்புது சாதனைகளை தினமும் படைத்துக்கொண்டு இருக்கிறார்.

**தமிழ்நாட்டுக்கும் பெருமை!**

எப்படி ஒருவர் சுறுசுறுப்பாக, ஒழுக்கமாக, அதே நேரத்தில் படைப்பாளியாக இருக்க வேண்டும் என்பதற்கு நம் அனைவருக்கும் முன்னுதாரணமாக இருக்க்கூடிய வர்தான் இசைஞானி அவர்கள். லண்டனில் அரங்கேற்ற ப்பட்ட இசைஞானி அவர்களின் சிம்பொனியை நேரில் கேட்டு ரசிக்க முடியவில்லை என்று, உங்களில் பலபேருக்கு அந்த வருத்தம் இருந்திருக்கும். அந்த வருத்தம், இன் றைக்கு வரைக்கும் எனக்கும் இருந்தது. அந்த ஏக்கத்தை நம் முதலமைச்சர் அவர்கள் நம் அரசு இன்றைக்கு நம் அனைவருக்கும் செய்து காட்டி யிருக்கிறது. அதுவும் மிகப்பெரிய பாராட்டு விழாவோடு, இந்த சிம்பொனி இசையின் அரங்கேற்றமும் நடந்திருக்கிறது. இது இசை ஞானி அவருக்கும் மட்டும் பெருமையல்ல. ஒட்டுமொத்த தமிழ்நாட்டுக்கும், ஒவ்வொரு தமிழனுக்கும் இது பெருமை.

**வரவேற்கிறேன்!**

இந்த பெருமைக்குரிய விழாவிற்கு தலைமை யேற்றுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வருக, வருக என வரவேற்கிறேன். இன்றைய விழாவின் நாயகர் நாடாளுமன்ற உறுப்பினர் இசைஞானி இளைய ராஜா அவர்களை வருக, வருக என வரவேற்கிறேன். நாடாளு மன்ற உறுப்பினர் உலக நாயகன் கமல் சார் அவர்களையும் வருக, வருக என வரவேற்கிறேன். சிறப்புக்குரிய விழாவுக்கு வருகை தந்துள்ள நம் சூப்பர் ஸ்டார் ரஜினி சார் அவர்களையும் வருக, வருக என வரவேற்கிறேன்.

மாண்பமை உயர்நீதிமன்ற நீதியரசர்களை வருக, வருக என வரவேற்கிறேன். நன்றியுரை ஆற்றவுள்ள மாண்புமிகு அமைச்சர் அண்ணன் மு.பெ.சாமிநாதன் அவர்களையும், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களையும், தோழமைக் கட்சிகளின் அனைத்து தலைவர்களையும், அனைத்து நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களையும், மாண்புமிகு மேயர் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளையும், இளைய ராஜா அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் அத்தனை பேரையும் வருக, வருக என வரவேற்கிறேன்.

தலைமைச் செயலாளர் முருகானந்தம் ஐ.ஏ.எஸ்., முதலமைச்சர் அவர்களின் செயலர் சண்முகம் ஐ.ஏ.எஸ்., தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் ராஜாராமன் ஐ.ஏ.எஸ்., செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் வைத்தியநாதன் ஐ.ஏ.எஸ்., உள்ளிட்ட அனைத்து அரசு அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள் அனைவரையும் வரவேற்று மகிழ்கிறேன்.

திரையுலகம் மற்றும் இசையுலகத்தை சேர்ந்த அனைத்து நண்பர்களையும், ஆளுமைகளையும் வருக, வருக என வரவேற்கிறேன். உலகம் முழுவதும் இருந்து வருகை தந்துள்ள இசைஞானியின் ரசிகர்களில் ஒருவனாக உங்கள் ஒவ்வொருவரையும் வருக, வருக என வரவேற்கிறேன்.

பத்திரிகை நண்பர்கள், இங்கு வந்துள்ள அனைத்து ரசிகர் பெருமக்களையும் வருக, வருக என வரவேற்று, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வரவேற்றுப் பேசினார்.

